ஆடி மாத
ஆலய தரிசனம்

24 நட்சத்திர மருத்துவ
சங்கம் தொடக்கம்

நீச்சலில் சாதனை படைக்கும்
பள்ளி மாணவி சுவாதி

ரூ.20/- | ஜூலை 2020 ஆடி | தீபம்: 8 ஒளி: 7



24 மனை குலமுரசு

தமிழ் மாத இதழ்



சமுதாய பீஷ்மர்
ராஜம் கிருஷ்ணன்


SRI VEERA'S GROUP
SRI VEERA'S CREATIONS
பல ஜவுளி கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்
ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
SRI VEERA'S CREATIONS
(Silks, Textiles & Readymade collections)
மொத்த விலை ஷோரூம்
Wholesale showroom
2 Wheeler & Car Parking வசதியுடன்
எண். 51-52/1, M.C. ரோடு, சென்னை - 600 021.
போன் : 2590 1771, 2590 1772, 2590 1773, 2590 1774

24 மனை குலமுரசு

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2013/48200

தீபம்: 8 ஒளி: 7

ஜூலை 2020 ஆடி

24 மனை தெலுங்கு செட்டியார்கள் இனமக்களுக்காக
24 மனை தெலுங்கு செட்டியார்கள் சேரிட்டபிள் டிரஸ்ட்
அறக்கட்டளையால் நடத்தப்படும் அரசியல் சார்பற்ற சமூக மாத இதழ்

24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்கம்
கீழ்ப்பாக்கம், சென்னை - 600010.

சிறப்பாசிரியர்:
கரூர் கே.சி.பழனிசாமி
Ex.MP., Ex.MLA.,

ஆசிரியர்:
Dr. துரை அங்குசாமி
M.A.,B.L.S.,B.Ed.,Ph.D.,

40 லட்சம் மக்களின் நாடித்துடிப்பு
24 மனை குலமுரசு மாத இதழ்

ஆண்டுச் சந்தா ரூ. 200/-

ஆண்டு சந்தா செலுத்தும் முறை

Account Name : 24 MANAI KULAMURASU
Bank Name : CANARA BANK
Branch : CHENNAI KILPAK
Account Number : SB. A/c. 1650101014869
IFSC CODE : CNRB0001650

மேற்கண்ட வங்கிக் கணக்கில் ஆன்லைன் மூலம் ரூ.200/- செலுத்தி அதன் பரிவர்த்தனை விபர ஸ்கிரீன்ஷாட்-ஐ 9965 900 990 என்ற வாட்ஸ்அப் (அ) kulamurasuoffice@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் முகவரி மற்றும் செல்போன் எண் குறிப்பிட்டு அனுப்பவும். கனரா வங்கியில் செலான் மூலம் பணமாக செலுத்துவோர் சந்தா ரூ.200 + வங்கி சேவைக் கட்டணம்+GSTவரி ரூ.60 சேர்த்து ரூ.260/-ஐ கனரா வங்கிக் கணக்கில் செலுத்தி, கௌண்டர் ஃபைல் ரசீது நகலுடன் உங்கள் முகவரி எழுதி மின்னஞ்சல் (அ) வாட்ஸ்அப் (அ) தபாலில் அனுப்பவும்.

24 மனை குலமுரசு,
330/1, சின்னாண்டான் கோவில் வீதி,
கரூர் - 639001.
Customer Care Cell: 9965 900 990
Ph: 04324-240663 - K.C.S.R.சிவக்குமார்
E-Mail: kulamurasuoffice@gmail.com

ஆசிரியர் குரல்



திரு.ராஜம் கிருஷ்ணன் ஐயா அவர்களுக்கு அஞ்சலிப்பு

ரோஜா மலரிதயம் கொண்ட
ராஜம் கிருஷ்ணன் அவர்கள்
24 மனை தலைமைச் சங்கத்தின்
தலைமைப் பீடத்தை அலங்கரித்த
பெருந்தலைவர்!

சமுதாய பீஷ்மர் - சமூக முன்னோடி
என்ற பட்டங்களால் கவுரவிக்கப்பட்டவர்.

நாடெங்கும் பயணித்து ஆற்றிய சமூக சேவையால்
நாலாறு மனை மக்களின் இதய சிம்மாசனத்தில்
நங்கூரமிட்டு வீற்றிருப்பவர்.

குலமுரசு பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர்
இன்றைய குலமுரசை வரிவிடாமல் படித்து
இதயம் திறந்து பாராட்டி மகிழ்பவர்.

"வார்த்தை ஜாலங்களுக்கு மயங்காதீர்கள்;
மெய்ப்பொருள் காண்பது அறிவு" - என்பது
மக்களுக்கு அவர் சொன்ன தாரக மந்திரம்.

உயர் பண்புகளின் உறைவிடமாகத் திகழ்ந்தவர்,
உழைப்பால் உயர்ந்த பெருந்தகையாளர்!




இணையற்ற ஆளுமைமிக்க
இம் மாமனிதரின் மறைவு
இனத்திற்கு ஈடில்லாப் பேரிழப்பு.

கனத்த இதயத்துடன்
கண்ணீர் வரிகளைக்
காணிக்கை ஆக்குகிறோம்..

துரை அங்குசாமி
ஆசிரியர்

திரு. ராஜம் S.கிருஷ்ணன் மலரும் நினைவுகள்





8-01-1997 அன்று தமிழக முதல்வராக இருந்த கலைஞர் அவர்களை திரு. K.C.பழனிசாமி MLA அவர்களுடன் நேரில் சந்தித்து வெள்ள நிவாரண நிதிக்கு ரூ. 1 லட்சம் தலைமைச் சங்கத்தின் சார்பாக வழங்கப்பட்டது. படத்தில் இடமிருந்து வலமாக திரு. S.A. தண்டபாணி, திரு.S.சங்கிலிமுத்து, திரு. M.சண்முகம் செட்டியார், திரு. G.சுகவனம் MLA., திரு. ராஜம் S.கிருஷ்ணன், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.



சென்னையில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் இடமிருந்து வலமாக திரு.N.S.சண்முகசுந்தரம், திரு.S.A.தண்டபாணி, திரு.ராஜம் S.கிருஷ்ணன், திரு.K.C.பழனிசாமி, திரு.S.G.விநாயகமூர்த்தி ஆகியோர்.

இனநலம் காத்த இனியவர்



தலைமைச் சங்க முன்னாள் தலைவர்

திரு. இராஜம் கிருஷ்ணன் அவர்கள்
மறைவுச் செய்திகேட்டு ஆறாத் துயரமடைந்தேன்..

அவர் உழைப்பால் உயர்ந்தவர், நல்ல பண்பாளர்,
பழகுவதற்கு இனியவர், சிறந்த ஞானமுடையவர்.

இதுவரை இருந்த தலைமை சங்கத் தலைவர்கள்
தங்கள் தொழிலை நேர்த்தியாக செய்துகொண்டே
தலைமைச் சங்கப் பணியைச் சிறப்பாகச் செய்தனர்.
ஆனால், அண்ணார் ராஜம் கிருஷ்ணன் அவர்கள்
தன் தொழில் பாதித்த போதும் அதைப் பொருட்படுத்தாமல்,
பொதுச்செயலர் திரு. S.A.தண்டபாணி அவர்களுடன்
ஊர் ஊராகச் சென்று தலைமைச் சங்கப் பணியாற்றினார்.

இனத்தின் மீது மாறாத பற்றுள்ளவர்.
உடல் நலிவுற்றிருந்த காலத்தில் கூட
என்னைச் சந்தித்து இனநலம் குறித்து பேசியுள்ளார்.

இவரது மறைவு நம் இனத்திற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பு.

எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு
அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

K.C.பழனிசாமி
நல்லெண்ணக் குழுத் தலைவர்,
24 மனை தெலுங்கு செட்டியார்கள் தலைமைச் சங்கம்

வருந்துகிறோம்



தலைமை சங்கத்தின் முன்னாள் தலைவர்,
நமக்கெல்லாம் வழிகாட்டிய கலங்கரை விளக்கம்,
அறக்கட்டளை முன்னோடி. சமுதாய பீஷ்மர், அருமை மாமா
கோவை **திரு. ராஜம் S. கிருஷ்ணன்** அவர்கள்
காலமானார் என்ற செய்தி ஆற்றவொண்ணா துயரத்தைத் தந்தது.

அவர் ஒரு சமுதாயப் போராளி; மாபெரும் சிந்தனையாளர்,
அவர் சாதித்த சமுதாயப் பணிகள் ஏராளம்.
அவரது மறைவு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல,
இந்த சமுதாயத்திற்கே மாபெரும் இழப்பாகும்.

தலைமைச் சங்கத்தின் சரித்திரத்தில் நீங்கா நினைவுகளுடன்
என்றும் வாழும் எனது வழிகாட்டி மாமா திரு.ராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு
கண்ணீரைக் காணிக்கையாக்கி மலரஞ்சலி செலுத்துகிறேன்.

திண்டுக்கல் **R.நடராஜன்,**
தலைவர்,
24மனை தெலுங்கு செட்டியார்கள்
தலைமை சங்கம், சென்னை.

ராஜம் கிருஷ்ணன் அவர்களுக்கு தூவிய அஞ்சலி மலர்கள்

தலைமைச் சங்க வாட்ஸ்அப் குரூப்பில் பகிரப்பட்ட புகழஞ்சலிப் பதிவுகள்

தொகுப்பு: **K.C.S.R.சிவகுமார், கரூர்.**



வணங்குதற்குரிய மாமா ராஜம் கிருஷ்ணன் அவர்கள் இப்போது நம்முடன் இல்லை என்பதை நினைத்துக்கூட பார்க்கமுடியவில்லை. நம் சமுதாயத்தில் உதித்த அதிசய மனிதர்களில் மாமா அவர்களும் ஒருவர். தலைமை சங்கத்திற்கு நிதி திரட்ட மாமா அவர்களும், அண்ணன் திருச்சி தண்டபாணி அண்ணன் அவர்களும் ஊர்ஊராக சுற்றிய காட்சி இன்றும் நமது கண் முன் நிற்கிறது. இந்த மாபெரும் சமுதாயத்தின் வலிமையான தூண் ராஜம் கிருஷ்ணன் மாமா அவர்கள்! அவரது ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வணங்குகிறேன்.

- **டாக்டர் வீ.வீ.முத்துசாமி,** மதுரை

★ ★ ★

தலைமை சங்கத்தின் முன்னாள் தலைவரும், தன்னுடைய நேர்மையான செயல்களால் நம் இன மக்களின் மனதில் நீங்கா இடம் பெற்று அனைவராலும் சமுதாய பிதாமகன் (பீஷ்மர்) என்று அழைக்கப்படும் பாசமிகு மாமா அவர்கள் மறைந்து விட்டார் என்பதைவிட நம் இன மக்களின் நெஞ்சத்தில் நிலைத்து விட்டார் என்றும் அண்ணாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்கின்றோம். ஆழ்ந்த வருத்தங்களுடன்

- **தா.செந்தில்குமார்,** நாமக்கல்

★ ★ ★

ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- **M.G. ராமச்சந்திரன்,** சென்னை.

★ ★ ★

தலைமை சங்க முன்னாள் தலைவர் பண்பாளர் திரு S. ராஜம் கிருஷ்ணன் அவர்கள் இயற்கையின் பால் ஈர்ப்பு கொண்டு காற்றுடன் கலந்து விட்டார். நம்மிடம் இருந்து பிரிந்து விட்டார்.

சமுதாய நிலத்தை பண்படுத்திய ஏர் உழவன்.
அழைத்துபேசி அரவணைத்து செல்லும்
நெறியாளர்.
திட்டமிடுதலில் அவர்கள் ஒரு பொறியாளர்.

எளிமையின் சிகரமே
ஏற்றமிகு தலைமையே!
ஏசுவர் யாருமில்லை!
மாசில்லா மாணிக்கமே!
நளினமாக பேசிடும் நடுநாயகரே!
சமுதாயத்தில் சாதித்த பணிகள் பல!

மேடைப்பேச்சில்
மெல்லிய ராகமே!
திண்ணிய கருத்து
உளமதில் படுமே!

இனி எப்போது கேட்போம்
நாவிற்கினிய பேச்சை!



மாமா ! நீங்கள் விட்டு சென்ற பணிகள் பல.
எப்படி ஈடேற்றுவது !

அலைகளையும் துளைபோட்டு கரை சேர்க்கும்
கலைநயம் மிக்கவரே !
மலையளவு துன்பம் வந்தாலும்
மாய்த்திடும் மாயக்கார மாமா !
மாய்ந்து போனது என்றால்
என் அஞ்சலியே
கண்ணீரில் நனைக்கின்றேன்.

இல்லத்தார் மனம் துயரத்தில்
அனுதாபங்களை பகிர்ந்து கொள்கிறேன்.

வாழ்க ! ராஜம் கிருஷ்ணன் நாமம் !

- **தெ. ஞானப்பிரகாசம்**, தேனி.

★ ★ ★

Great loss to our community. Nice gentleman. My heart felt condolences to his family members

- **சிவசண்முகம்**, கோவை

★ ★ ★

மாமா ராஜம் கிருஷ்ணன் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த வேதனைப்பட்டேன். மிகப்பெரிய இனப் பற்றாளரை நம் சமுதாயம் இழந்துவிட்டது.

அவர் தலைமைச் சங்கத்தின் தலைவராக இருந்தபோது, எனது தந்தையார் M.சண்முகம் செட்டியார் தலைமைச் சங்கப் பொருளாளராக இருந்தார். இருவரும் இணைந்து ஆற்றிய இனப்பணியை நான் நன்கு அறிவேன். எப்போதும் இனநலம் பற்றியே இருவரும் விவாதிப்பார்கள்.

ராஜம் கிருஷ்ணன் மாமா அவர்கள் நல்ல பண்புகள் நிறைந்தவர். எப்போதும் இனிமையாகப் பேசக்கூடியவர். இவரது மறைவு இனத்திற்கும் தலைமைச் சங்கத்திற்கும் மிகப்பெரிய இழப்பு. அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

- **S.கிருஷ்ணகுமார் (கண்ணன்)**, திருப்பூர்.

★ ★ ★

வெள்ளை உள்ளம் கொண்ட பிள்ளை குணம்! தலைமை சங்க முன்னாள் தலைவர் ராஜம் கிருஷ்ணன் அவர்கள் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபங்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

- **K.V.கிருஷ்ணன்**, சென்னை.

சமுதாய பணியிலும் ஆன்மிக பணியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து சமுதாய வளர்ச்சிக்காக அரும் பாடுபட்ட சமுதாய தூண் முன்னாள் மாநில தலைமை சங்க தலைவரும். கௌரவ ஆலோசகரும் உயர்திரு ராஜம்.கிருஷ்ணன். அவர்களுடைய மறைவு சமுதாயத்திற்கு பேரிழப்பு அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கிறேன்.அவரை இழந்து வாடும் குடும்பத்தார்க்கும் உறவினர்களுக்கும் ஆழந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

- **செட்டிவீதி S. பரமசிவம்**, கோவை

★ ★ ★

நமது 24 மனை தெலுங்குச் செட்டியார்கள் தலைமை சங்கத்தின் முன்னாள் தலைவரும், நமது 'சமுதாயத்தின் பிதாமகன்' என்று போற்றப்படும் ஒப்பற்ற மனிதநேய பண்பாளருமான மதிப்பிற்குரிய திரு.ராஜம் கிருஷ்ணன் அவர்களின் மறைவு நமது இனத்திற்கு பேரிழப்பு ஆகும். அய்யா அவர்களது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஆண்டவனை பிராத்தனை செய்கிறேன்.

- **K.C.S.R. சிவகுமார்**, கரூர்

★ ★ ★

கடந்த வருடம் காஞ்சி சண்டி ஹோம ஆலோசனை கூட்டத்தில், அண்ணன். திரு. ராஜம் கிருஷணன் அவர்களின் 'தலைமை சங்கம்' பற்றிய தெளிவான பார்வை, தீர்க்கமான பார்வை, வெளிப்படையான பேச்சு, அவசியம் நடைமுறைப்படுத்த வேண்டிய 'நல் எண்ணம்'. அவரின் அன்றைய சிந்தனையை செல்படுத்துவது அவருக்கு நாம் செலுத்தும் வணக்கம். நால்லோர் என்றும் நல்லவை நோக்குவோம். நன்றி!. வணக்கம்!.

- **V.சிவானந்தம்**, திருப்பூர்.



சமுதாய தூண் மாமா அவர்கள் சாய்ந்தது, கேள்வியுற்று ஆறாதுயரம் அடைந்தேன். மாபெரும் சமுதாய காவலர், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத் தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

R. L. முத்து வீரன் செட்டியார், சென்னை.

★ ★ ★

நம்மினத்தின் முன்னாள் தலைவர் அன்பு மாமா ராஜம்கிருஷ்ணன் அவர்களின் மறைவு நம்மினத்திற்கே ஏற்பட்ட பேரிழப்பாகும். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்வோமாக.

- **இரா. பெருமாள்,** இராஜபாளையம்.

★ ★ ★

24 மனையாரின் சமுதாய பிதாமகன், உயரிய சமுதாய நற்பணியாளர், தலைமை சங்க முன்னாள் தலைவரும், குலமுரசு ஆசிரியரும் கௌரவ ஆலோசகருமான அன்னார் மேதகு ராஜம் S.கிருஷ்ணன் ஐயா அவர்களின் மறைவு நம் சமுதாயத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் எல்லாம்வல்ல இறைவனை பிராத்திக்கிறோம். அவரை இழந்து வாடும் குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துகொள்கிறோம்.

- **P.திம்மராயன்,** கிருஷ்ணகிரி

★ ★ ★

ஆழ்ந்த இரங்கல்கள்...

- **பொன்குமார்,** மதுரை.

★ ★ ★

நமது தலைமை சங்கத்தின் முன்னால் தலைவர், சமுதாய முன்னோடி, சொல்லின் செல்வர், சமுதாய பிதாமகன் என்று எல்லோராலும் ஏற்றுகொள்ளப்பட்ட எனது பாசமிகு அண்ணார் ராஜம் S கிருஷ்ணன் அவர்களின் மறைவு ஈடு செய்யமுடியாத ஒன்றாகும். ஆழ்ந்த இரங்கல்.

- **N.பழனிசாமி,** சென்னை.

★ ★ ★

நமது சமுதாய பீஷ்மர் மாமா அவர்களது மறைவு சமுதாயத்திற்கு ஓர் பேரிழப்பு. அவர்தம் குடும்பத்தார்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்...

- **சண்முகம்,** நாமக்கல்

★ ★ ★

24 மனை இன சொந்தங்களில் எட்டு வீட்டு பங்காளிகளுக்கு திலகமாகவும், 16 வீட்டு மாமன் மைத்துனர் களுக்கு சிகரமாகவும் விளங்கியவர் இனப் பணியிலே இம்மியளவும் சளைக்காமல் இறுதிவரை பணியாற்றியவர். காஞ்சி காமாட்சியின் கவின்மிகு சேவகர். கண்ணை இமை காப்பது போல் நமது இனத்தை காத்துவந்த பிதாமகர் ஐயா தமது ஆசியை நமது இனத்திற்குவழங்க மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்று





விட்டார். அன்னாரது ஆன்மா எல்லாம் வல்ல காஞ்சி ஸ்ரீகாமாட்சி திருவடிகளில் இளைப்பாற மனதார பிரார்த்திக்கிறோம்.

நாமக்கல் மாவட்ட 24மனை தெலுங்கு செட்டியார் சங்கம், நாமக்கல்

★ ★ ★

ஒப்பற்ற சமுதாய முன்னாள் தலைவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்

- **V. ராஜவடிவேல்,** சேலம்.

★ ★ ★

அரும்பெரும் தலைவர், இளைஞர்களின் நல்வழி காட்டி, சமுதாய முன்னோடி, பேரன்பாளர், ஐயா அவர்களின் ஆன்மா இறை அடியில் துயில பிரார்த்திக்கிறேன்

R.P.R. ராமையா, திண்டுக்கல்.

★ ★ ★

சமுதாய முன்னோடியும் தலைமை சங்கத்தின் பணிகளில் சிறந்து விளங்கியவரும் அன்புமாமா அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

- **காந்தி,** சேலம்

★ ★ ★

24 மனை தெலுங்கு செட்டியார் தலைமை சங்கம் முன் தலைவர், தொழிலதிபர், எழுத்தாளர், நல்ல பேச்சாளர், சிந்தனையாளர் மற்றும் பல நிலைகளில் சிறந்து விளங்கிய கோவை திரு ராஜம் கிருஷ்ணன் அவர்களுடைய மறைவுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

- **பாஸ்போர்ட் கிருஷ்ணமூர்த்தி,** கேரளா

ஒப்பற்ற சமுதாய முன்னாள் தலைவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்

- **முத்தையா,** சென்னை

★ ★ ★

ஆழ்ந்த இரங்கல், மாமா அவர்கள் ஆத்மா இறைவன் காலடியில் இளைப்பாறட்டும்..

-**கணேஷ் பாபு,** பொள்ளாச்சி

★ ★ ★

Deeply mourned mama

- **தமிழரசி மாணிக்கம்**

★ ★ ★

நம் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமுதாய பிதாமகர், நல்வழிகாட்டி, எந்தவொரு மேடையிலும் சமுதாய நிகழ்வுகளை எவ்வித தயக்கமும் இன்றி எதற்கும் எவருக்கும் பயப்படாமல் உண்மையை உள்ளதை உள்ளபடி வீர தீரத்துடன் எடுத்துரைக்கும் சீர்திருத்த செம்மல், நமது சமுதாய தலைமை சங்கத்தின் முன்னாள் தலைவர், இன்னாள் வழிகாட்டி, ஆலோசகர், சமுதாயத்திற்காக அயராது அல்லும் பகலும் பாடுபட்ட வள்ளல் பெருந்தகை, கோவை திரு. ராஜம் S.கிருஷ்ணன் அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

வி. ராம்பிரகாஷ்,
தே.கோபாலகிருஷ்ணன்.

★ ★ ★

ஒப்பற்ற சமுதாய முன்னாள் தலைவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்

- **கோகுல்நாத்,** ஈரோடு



Deeply mourned mama

- MSK

★ ★ ★

ஒருங்கிணைந்த டெல்டா மாவட்டங்களின் சார்பில் அய்யா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்..

Er. தியாகராஜன், சீர்காழி.

★ ★ ★

ஆத்மா அமைதி பெற இறைவனை பிரார்த்தனை செய்கிறோம்

- U.K.நந்தகுமார், உடுமலை

★ ★ ★

ஒப்பற்ற சமுதாய முன்னாள் தலைவரின் ஆன்சமுதாய முன்னோடி, நம் தலைமை சங்க முன்னாள் தலைவர், நம் குலமுரசின் முன்னாள் ஆசிரியர் , ஐயா அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கல்கள். அவர் பூதவுடல் மறைந்தாலும், அன்னாரின் வழிகாட்டல் என்றும் நம் சமூகத்தார் மனதில் நிலை பெற்று நிற்கும். ஆழ்ந்த இரங்கல்களுடன்,

- திருச்சி. K. செல்வகுமார், B.E.

★ ★ ★

ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்

- பிரசாந்த்

★ ★ ★

ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்

- மஞ்சுநாதன்



Deepst condolence to sri rajam krishnan's death.

- S.K.P.S. Krishnamurthy, Chennai

★ ★ ★

சமுதாயத்தின் மூத்த முன்னோடியும் அனைவராலும் சமுதாய பிதாமகன் பீஷ்மர் என்று அன்பாக அழைக்கப்படும் தனது அன்பால் சமுதாயத்தை அரவணைத்து வழி நடத்திய முன்னாள் மாநில தலைமை சங்க தலைவரும்.கௌரவ ஆலோசகரும் உயர்திரு ராஜம். கிருஷ்ணன். அவர்களுடைய மறைவு சமுதாயத்திற்கு பேரிழப்பு அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிராத்திக்கிறோம் .அவரை இழந்து வாடும் குடும்பத்தார்க்கும் உறவினர்களுக்கும் ஆழந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறோம்.

- செட்டிவீதி **P.ஆறுமுகம்,**
கணுவாய் **C.திலீப்குமார்** (E.B)
குனியமுத்தூர். **K.ரமேஷ்குமார்.**
அசோகநகர் **S.ஆறுமுகம்.**
சாய்பாபாலனி **S.மணிசேகர்,**
வைசியாள்வீதி **C.S.கணேஷன்,**
செட்டிவீதி, **S.கிருஷ்ணமூர்த்தி,**
பொன்னையராஜபுரம்
R.மணிகண்டன்
S.செந்தில்முருகன்,
பால்கம்பனி, **K.பலதண்டபாணி**
செட்டிவீதி **A.வினோத்குமார்,**
S.மருதவாணன்
மற்றும் கோவை மாநகர
செட்டிவீதி சமுதாயத்தார்.



சுலப தவணையில்
UPTO 60% DISCOUNT
ஸ்மார்ட்போன்கள்
MEGA EXCHANGE OFFER
ZERO DOWN PAYMENT
உங்கள் பழைய மொபைலை கொடுத்து சுலபத்தவணையில் புதிய ஸ்மார்ட்மொபைலுக்கு மாறுங்கள்
Karbonn K59 Star
JODI OFFER
₹ 1599
Lenovo K10 Note
4GB + 64GB
45% OFF
NOW@
₹8999
Realme 6
6GB + 128GB
AVAILABLE NOW
Redmi note 8 pro
6GB + 64GB
₹ 1000 DISCOUNT
*Terms & Conditions apply. Discount on MRP
CALL : 99406 88855
STAY CONNECTED
INSTAGRAM
FACEBOOK
YOU TUBE
பூர்விகா

24 நட்சத்திர மருத்துவர் சங்கம் தொடக்கம்

உலகெங்கிலும் பரவியிருக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார் இன மருத்துவர்களை ஒருங்கிணைத்து, நம் இனப்பற்றை தூண்டி, இனத்திற்காக சேவை மனப்பான்மையுடன் இணைந்திருக்கும் இந்த 24 நட்சத்திர மருத்துவர்கள் சங்கம் ஓர் இனிய உதயம்!

24 Star Doctors WhatsApp குழுவானது 09.07.2015 அன்று ஆரம்பிக்கப்பட்டு சிறிது சிறிதாக நம் இன மருத்துவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி தற்பொழுது இந்த குழுவில் சுமார் 450 மேல் மருத்துவர்கள் உள்ளார்கள்

நமது சமுதாயத்திற்கு மருத்துவர்களின் சேவை மிக அவசியம் என்பதால் நம் மக்களின் நன்மைக்காகவும் அவர்களுக்கு சிகிச்சை கொடுத்து குணப்படுத்தவும், உயிர்களை காப்பாற்றவும், சேவை செய்ய வாய்ப்புத் தந்த இறைவனுக்கு நன்றி!

நம்மைப் படைத்த இறைவன் மருத்துவர்கள் மீது நம்பிக்கை வைத்தே நம்மை மருத்துவர்களாக உருவாக்கி, கடவுள் நம் உருவில் நடமாடுவதாக மக்கள் பேசிவருகிறார்கள் அந்த நம்பிக்கையை நிரூபிக்கும் விதமாகவும், நமது சமுதாய வளர்ச்சிக்காக தொடர்ந்து பாடுபடுவோம் என்றும் நாமனைவரும் மனதிற்குள் உறுதியெடுத்துக் கொள்வதறிந்து மிக்க மகிழ்ச்சியும் பெருமையுமடைகிறோம். சுக்குநூறாய் சிதறிக் கிடந்த மருத்துவர் சமுதாயத்தை ஒன்று சேர்த்து 24 நட்சத்திர மருத்துவர்கள் சங்கம் அமைப்பை ஏற்படுத்த உதவிய அனைவருக்கும் நன்றி!

நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலிருக்கும் நம்இன மக்களுக்கு ஏற்படும் நோய்களை குணப்படுத்த வழிகாட்டுதல் மற்றும் வசதியில்லாமல் சரியான சிகிச்சை செய்யமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு சரியான வழிகாட்டி, சரியான மருத்துவரிடம் சரியான மருத்துவம்/ அறுவை சிகிச்சை குறைந்த செலவில்/ வசதியில்லாதவர்களுக்கு முடிந்தவரை இலவசமாக சிகிச்சை பெற உதவி செய்வோம்.

நம் இன மருத்துவர் இணைந்த இந்த குழுவின் முதலாவது கூட்டமானது 07.06.2020 அன்று மெய்நிகர் (online virtual meeting) வழியாக சிறப்பாக நடைபெற்றது. அக்கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்தை எடுத்துரைத்தார்கள்.

இரண்டாவதாக தீவிர கலந்தாலோசிப்பிற்குப் பின் 24 நட்சத்திர மருத்துவர்கள் நிர்வாக சபை அனைத்து மண்டலங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டது. 24 Star Doctors Governing Council கூட்டமானது 09.07.2020 அன்று தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் முன்னிலையில் நம் இன மருத்துவரின் நிலைமை பற்றியும், மக்களுக்கு சேவை செய்வது பற்றியும் விரிவாக விவாதிக்கப்பட்டது...

குறிக்கோள்கள்:

1. முதலாவது நம் இன மக்களுக்கு நோய் சிகிச்சைகாக நம் இன சிறப்பு சிகிச்சை மருத்துவ நிபுணர்களுக்கு பரிந்துரை செய்து, சரியான சிகிச்சை கிடைக்க உதவுதல்
2. படிக்கும் இளம் மருத்துவர்களுக்கு கல்வி நெறிமுறைகளுக்கு ஏற்ப மூத்த மருத்துவர் கற்பிக்க வசதி மற்றும் பட்ட மேற்படிப்பில் சேர உரிய பல வழிமுறைகள், சொல்லித்தருதல் மேலும் இளைய மருத்துவர்களுக்கு வழிகாட்டுதல். இம் மருத்துவ சமூதாயம் முன்னேற அனைவரும் ஒன்றிணைவோம் என சபதம் எடுப்போம்.
3. 24 Star Doctors Corpus Fund 2020 துவங்கி, அதை பேரிடர் காலம் மற்றும் அவசர சிகிச்சைக்கு உதவும் வகையில் நம் இன மருத்துவர்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் உதவுவது.
4. நாம் மருத்துவ சேவை செய்யும்போது ஏதாவது சட்ட சிக்கல் ஏற்படின் அந்த மருத்துவருக்கு உதவுதல்
5. மிக பிரமாண்டமான இலவச மருத்துவ முகாம் நடத்தி இந்த நாட்டிற்கு நம் இனத்தை பறைசாற்றி மக்களுக்கு உதவுவது.
6. உலகமே உற்றுப்பார்க்கும் அளவிற்கு மிக பிரமாண்டமான முறையில் மருத்துவர்களுக்கு என்றே மணமாலை நிகழ்ச்சியை நடத்த ஏற்பாடு செய்யப்படும்.

கோவை Dr.R.பாலமுருகன் - தலைவர்

தேனி Dr.S. லோகநாதன் - செயலாளர்

மதுரை Dr.S.சதீஷ்குமார் - பொருளாளர்

செய்தித் தொகுப்பு:

- Dr.M. செல்வராஜ், கோவை.



கீதை காட்டும் பாதை

கீதைச்செல்வர்
நா.கிரிதாரி பிரசாத்

கர்மயோகம் என்பது; உண்பது, உறங்குவது, இனத்தைப் பெருக்குவது, ஆணவமாக உலவுவது அல்ல.

பார்க்கிற பொருள் அனைத்திலும் பரமனையே கண்டு, இறைவனுக்கு சேவை செய்கிறோம் என்ற எண்ணத்தோடு தன்னலமற்றத் தொண்டு செய்து வாழ்வது தான் கர்மயோகம்.

நாமே சமைத்து நாம் மட்டும் தனித்துச் சாப்பிடுவது கர்மம். சமைத்த உணவை மற்றவர்களுடன் உவப்புடன் கொடுத்து உண்பது கர்மயோகம்.

யஜ்ஞசிஷ்டாசின : ஸ்ந்தோ முச்யந்தே
ஸாவகில்பிஷை
புஞ்ஜதே தே த்வகம் பாபா யே பசந்த்
- யாத்மகாரணாத்

என்று கீதை மூன்றாவது அத்தியாயத்தில் 13ஆவது சுலோகத்தில் சொல்கிறது.

பணத்தைத் திரட்டிப் பாங்கியிலே போட்டு வைப்பது கர்மம். அந்தப் பணத்தைப் பிறர்க்கு உதவும் வகையில் செலவிடுவது கர்மயோகம்.

இங்கிலாந்து நாட்டு பேரரசி ஒருத்தி கர்மயோகியாக விளங்கினாள். இறந்து போன ஒருவரது சடலத்தைத் தாமே சுமந்தாள்.

இறந்து போன அந்த மனிதன் யார்? அவனை ஏன் இங்கிலாந்து நாட்டு பேரரசி தன் தோளில் சுமந்தாள்?

அந்த மாமனிதர் நடுங்கும் குளிரில் ஒரு பாலத்தின் அடியில் தாங்கவொண்ணாத துயரத்துடன் நடுங்கிக் கொண்டு படுத்திருந்த முன்னூறு ஏழைகளுக்குத் தன் தோள் மேல் சுமந்து எடுத்துச் சென்று கம்பளிப் போர்வைகளை ஒவ்வொருவருக்கும் பரிவுடன் போர்த்தினார். அதன் பிறகு மண்டியிட்டு இவ்வேழைகளே இறைவனின் தோற்றங்கள் என்று இயேசு நாதரை வணங்கினார். அவர்தான் ஜெனரல் பூத். அவருடைய சடலத்தைத் தான் அரசி தம் தோளில் சுமந்தாள். அவரை மகோன்ன நிலைக்கு உயர்த்தினாள்.

ஏழைகளின் துன்பத்தைக் கண்டு இரங்குகிற, அவர்களது துன்பம் துடைக்க முந்துகிற உள்ளம் ஜெனரல் பூத் என்பவருக்கு இருந்தது.

அரசி என்ற ஆணவம் இல்லாது பற்றற்ற மனத்தோடு, மக்களுக்குத் தொண்டாற்றிய ஒருவரை அரசி வாழ்த்தினாள்.

மகாபாரத யுத்தத்தில் பொழுது சாய்ந்ததும் எல்லோரும் மாலை வழிபாடு செய்யப் போய் விடுகிறார்கள்.

ஞானியாகிய கண்ணனோ ரதத்திலிருந்து குதிரைகளை அவிழ்த்து விடுகிறான். அன்புடன் அவைகளுக்குத் தண்ணீர் காட்டுகிறான். கொள்ளு வைக்கிறான். உடலைத் தேய்த்து விடுகிறான். அவற்றின் உடலிலுள்ள உண்ணிகளை எடுக்கிறான்.

கர்மயோகி எப்படியிருக்க வேண்டும் என்று கண்ணன் வாழ்ந்து காட்டுகிறான்.

கர்மயோகி தன் காரியத்தைப் பிறரைவிடச் சிறப்பாகச் செய்வான்.

அவன் செய்யும் காரியங்களே அவனது கடவுள் வழிபாடும் பூஜை நியமங்களும் ஆகும்.

கர்ம யோகியான கண்ணன் பாரதப் போரில் குதிரைகளுக்கு உடம்பைத் தேய்த்துவிட்டுத் தீனி வைக்கிறான். ராஜசூய யாகத்தில் மற்றவர்கள் சாப்பிட்ட எச்சில் இலைகளை எல்லாம் உவப்புடன் எடுக்கிறான். காட்டில் மாடு மேய்க்கப் போகிறான்.

நாம் செய்யும் வேலைகளில் ஏற்றத்தாழ்வு என்பதே கிடையாது. செய்யும் வேலையைக் கர்மயோகமாகச் செய்ய வேண்டும்.



இதைத்தான் மகாகவி பாரதியார் "எழுத்தும் தெய்வம்! எழுதுகோலும் தெய்வம்!" என்கிறார். தாம் ஆற்றி வந்த பணியைக் கர்மயோகமாகவே செய்தார்.

கர்மயோகி தான் பெறும் ஊதியத்தில் கால் பங்கு மறைந்த மூதாதையர்க்கு, கால் பங்கு வாழும் பெற்றோர்க்கு; கால் பங்கு மனைவி மக்களுக்கு; கால் பங்கு தனது எதிர்கால வாழ்விற்கு என்று ஒதுக்க வேண்டும்.

இல்லறமே துறவறத்திலும் சிறந்தது. இல்லறத்தான் தன் கடமையை நிறைவேற்ற தன் வாழ்வையே அர்ப்பணிக்கிறான்.

துறவியும் சிறந்தவரே, ஆனால் தன்னந்தனியனாய் நிற்கிறான்.

கோபத்தால் கொக்கை எரித்தார் நரோத்தமா என்ற முனிவர். அவ்வளவு சக்தி பெற்றவர். அவர் ஒரு வீட்டுக்குச் சென்று பிச்சை கேட்டார்.

வீட்டுத் தலைவி அப்போது தம் கணவனுக்குச் சேவை செய்து கொண்டு இருந்தாள். அதனால் "சற்றுப் பொறும் இதோ வருகிறேன்" என்றாள்.

பிச்சையிடத் தாமதித்த அந்தப் பெண்மீது முனிவருக்குக் கோபம் வந்தது. அந்தப் பெண்மணியை உற்று நோக்கினார்.

"கொக்கு என்று என்னை நினைத்தாயோ கொங்கணவா?" என்று முனிவரைப் பார்த்துக் கேட்டாள் அந்த மாதரசி.

"கொக்கை எரித்தது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று மிகுந்த வியப்புடன் அந்தப் பெண்மணியைக் கேட்டார்.

"என் கணவருக்கு மனப்பூர்வமாகப் பணிவிடை செய்வதன் மூலம் கிடைத்த ஞானத்தால் அறிந்தேன்" என்றாள் அந்த இல்லத்து அரசி.

இல்லறத்திலிருந்து கொண்டு கடமை உணர்வுடன் பணியாற்றினாலும் இத்தகைய ஆற்றல் கிடைக்கும். கடமையில் உயர்வு; தாழ்வு பார்க்காமல் பயன் கருதாமல் தெய்வ உணர்வுடன் கர்மத்தை ஆற்றும்போது அது கர்மயோகமாகிறது.

"ஜனகன் முதலானோர் தாங்கள் ஆற்றிய செய்கையின் மூலமாகவே சித்தி பெற்று இருக்கிறார்கள். எனவே உலக நன்மையைக் கருதி ஒவ்வொருவரும் தொழில் செய்ய வேண்டும்" என்கிறார் கண்ணன்.

கர்மயோகம் ஞானயோகத்துக்கு ஆரம்பம் என்றே சொல்லலாம்.

மாண்புமிகு அமைச்சர் ராதாகிருஷ்ணன் அவர்கள் அளித்த நலத்திட்ட உதவிகள்



திருப்பூர் மாவட்ட காவல்துறை ஆயுதப்படை பிரிவில் பணியாற்றிய பெரியபட்டி கள்ளப்பாளையத்தை சேர்ந்த பிரபு என்ற காவலர் காங்கேயம் பகுதியில் இரவு ரோந்து பணியில் பணியாற்றியபோது விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற லாரியை துரத்திச் சென்றபோது, பிரபு மீது லாரி மோதியதில் சம்பவ இடத்திலேயே இறந்தார்.

கடமை தவறாமல் துணிச்சலுடன் பணியாற்றி மரணமடைந்த காவலர் பிரபுவின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறும் விதமாக மாண்புமிகு அமைச்சர் அரசு கேபிள் டிவி நிறுவன தலைவர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்கள் நேரில் சென்று பிரபுவின் பெற்றோரிடம் ஆறுதல் கூறியதுடன் அமைச்சர் அவர்கள் தமது சொந்தப் பணத்தில் ரூபாய் ஐம்பதாயிரம் வழங்கினார். மேலும், தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அரசின் உரிய நிவாரணம் மற்றும் உதவிகள் பிரபுவின் குடும்பத்திற்கு கிடைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் அவர்கள் கூறினார், அமைச்சர் அவர்களுடன் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் விஜயகார்த்திகேயன், உடுமலை ஆர்டிஓ ரவிக்குமார், உடுமலை டிஎஸ்பி ஜெயச்சந்திரன் உள்ளிட்ட அரசுத்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.



உடுமலை சட்டமன்ற தொகுதி கோலார்பட்டி ஊராட்சியில் வசித்துவரும் உடல் ஊனமுற்ற சிறுவர் சிறுமிருக்கு மாண்புமிகு அமைச்சர் அரசு கேபிள் டிவி நிறுவன தலைவர் உடுமலை கே ராதாகிருஷ்ணன் அவர்களிடம் நடக்கமுடியாமல் தவழ்ந்து செல்வதால் உடல் ஊனமுற்றோருக்கான இருசக்கர சைக்கிள் வழங்க வேண்டி மனு அளித்தனர். பரிவுடன் பரிசீலித்த அமைச்சர் அவர்கள் தனது சொந்த செலவில் உடல் ஊனமுற்ற இருவரை வரவழைத்து உடல் ஊனமுற்றோருக்கான இருசக்கர சைக்கிள்களை வழங்கினார்.


வண்ணாரப்பேட்
ஸ்ரீ சாந்தி சாரிஸ்
டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ்
மொத்த விலைக்கடை
SHANTHI SAREES
ஸ்ரீ சாந்தி சாரிஸ்
NO.1 SHOP
New Collections ! New Style ! New Fashion
SS No.1 Shop
New சாந்தி சாரிஸ்
வண்ணாரப்பேட்
NEW SHANTHI SAREES
SUPER READYMADES
SHANTHI SAREES
NO.1 SHOP
ஹோல்சேல் பிரைஸ்ல...
நாங்க மட்டும் சென்னையில...
சூப்பர் ரெடிமேட்ஸ்
No.59, M.C. ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 21.
: 044 - 25900181 | 25901181 | 25902183

* வற்றல் குழம்பை, தாளித்த எண்ணெய், மேலே வரும் வரை கொதிக்க விட வேண்டும்.

* ரசப்பொடி இல்லாத போது ரசம் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் மிளகு சீரகத்துடன் ஒரு கரண்டி துவரம் பருப்பையும் வைத்து அரைத்துப் பேட்டால் ரசம் சுவையாக இருக்கும்.

* மாவு பிசைந்தவுடனேயே பூரி போட வேண்டும்.

* குறைந்தது இரண்டு மணி நேரமாவது சப்பாத்திக்கு மாவு ஊற வேண்டும்.

* வாழைப்பூவை, முதல் நாள் இரவே நறுக்கி, தண்ணீரில் போட வேண்டும்.

* கடலை உருண்டைக்கு, வெல்லப்பாகு, முத்தின பாகாக இருக்கவேண்டும்.

* போளிக்கு மாவு, கிட்டத்தட்ட ஆறு மணி நேரம் ஊற வேண்டும்.

* ஜவ்வரிசி வற்றலுக்கு, அரை உப்பு போட்டு காய்ச்ச வேண்டும்.

* புளி காய்ச்சலுக்கு, புளியை கெட்டியாக கரைக்க வேண்டும்.

* குருமாவை இறக்கும் போது, கரம் மசாலாவை சேர்க்க வேண்டும்.

* பச்சை கற்பூரம் டப்பாவில், நான்கு மிளகை போட்டு வைக்க வேண்டும்.

* சாம்பார் வைக்கும்போது சாம்பாரில் தண்ணீர் அதிகமாகிவிட்டால் உடனடியாக 2 தேக்கரண்டி கடலை மாவு, 1 தேக்கரண்டி அரிசிமாவு என இரண்டையும் சிறிது தண்ணீர் விட்டு கரைத்து சாம்பாரில் விட்டு கொதிக்க வைத்து இறக்கினால் சாம்பார் தயார்.

* சாம்பாரில் மிளகாய்த்தூள் காரம் அதிகமாகி விட்டால் உடனடியாக 2 தக்காளிகளை பொடியாக நறுக்கி சிறிது எண்ணெயில் வதக்கி சாம்பாரில் சேர்த்து கொதிக்க வைத்து எடுத்தால் மிதமான காரத்துடன் சாம்பார் தயார்.

* சாம்பாரில் புளிப்புச்சுவை அதிகமாகிவிட்டால் உடனடியாக ஒரு வெங்காயத்தை பொடியாக நறுக்கி சுவைகு தகுந்த பச்சை மிளகாய் அல்லது காய்ந்த மிளகாய் சேர்த்து சிறிதளவு எண்ணெய் விட்டு வதக்கி சாம்பாரில் சேர்த்து கொதிக்க வைத்து இறக்கி வைக்கவும் சுவையான சாம்பார் தயார்.



நளபாகம்

* சாம்பார் வைக்க பருப்பு சிறிதளவே இருந்தால், கவலைவேண்டாம் பருப்பு சாம்பாருக்கு பதிலாக கையில் உள்ள எந்த காய்கறிகளானாலும் அதில் சேர்த்து சாம்பார் வைத்தால் சுவையான காய்கறிகளுடன் கூடிய சாம்பார் தயார். இதுபோன்று சாம்பார் வைத்தால் 2 பேருக்கு வைக்கும் சாம்பார் 4 பேருக்கு போதுமான சாம்பார் தயார்.

சமையலில் செய்யக்கூடாதவை!

* காபிக்கு பால் நன்றாகக் காயக்கூடாது.

* மோர்க்குழம்பு ஆறும் வரை மூடக்கூடாது.

* கீரைகளை மூடிபோட்டு சமைக்ககூடாது.

* தக்காளியையும் வெங்காயத்தையும் ஒன்றாக வதக்கக்கூடாது.

* பிரிட்ஜில் வாழைப்பழத்தையும் உருளைக் கிழங்கையும் வைக்கக்கூடாது.

* குழம்போ, பொரியலோ அடுப்பில் இருக்கும் போது கொத்தமல்லியை போடக்கூடாது.

* குலாம்ஜாமூன் பொரிக்க எண்ணெய் நன்றாக காயக்கூடாது.

* தேங்காய்ப்பால் சேர்த்தவுடன் குழம்பு அதிகமாக கொதிக்ககூடாது.

* ரசம் அதிகமாக கொதிக்கக் கூடாது..

நீச்சல் போட்டிகளில் பங்கேற்று சாதிக்கும் நம் இன மாணவி



சுவாதி

(8 வீடு - தவலையர் குலம்)

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் அருகே உள்ள சில்லமரத்துப்பட்டியைச் சேர்ந்த நம் இன இளம் நீச்சல் வீராங்கனை சுவாதி. இவர் 8 வீடு தவலையர் குலத்தைச் சேர்ந்தவர். பல்வேறு நீச்சல் போட்டிகளில் பங்கேற்று நம் 24 மனை இனத்திற்கு பெருமை சேர்த்து வருகிறார். இவரது தந்தை தற்போது இல்லை. தாய்க்கு நிரந்தர வருமானம் இல்லை. பெரிதாக பொருளாதார பின்புலம் இல்லை. நகர்ப்புற வசதிகள் இல்லை. ஆனால் இந்த 'இல்லை'களை எல்லாம் தாண்டி, "எனக்கு சாதிக்கும் துடிப்பும், அதற்காக அயராது உழைக்கும் உறுதியும் இருக்கின்றன. நிச்சயம் நாட்டுக்காக பதக்கம் வென்று கொடுப்பேன்' என்று குளுரைக்கிறார், இளம் நீச்சல் வீராங்கனை சுவாதி.

சிறு கிராமத்தில் இருந்து தேசிய அளவு முன்னேறியிருக்கிற சுவாதியின் பேட்டி...

உங்கள் சொந்த ஊர், குடும்பம் பற்றி...

அப்பா குருநாதன், எனக்கு 2 வயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். தாய் அழகுத்தாய், ஒரு சாக்பிஸ் கம்பெனியில் தினக்கூலி வேலை செய்துதான் என்னைக் காப்பாற்றுகிறார். எங்கள் ஊரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் நான் 9-ம் வகுப்பு படிக்கிறேன்.

உங்களுக்கு நீச்சலில் ஆர்வம் ஏற்பட்டது எப்படி?

நான் ஆறாம் வகுப்பு படிக்கும்போது, தேனியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நீச்சல் குளத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக் கான நீச்சல் போட்டியைக் காண எங்கள் பள்ளியில் இருந்து அழைத்துச் சென்றி ருந்தார்கள். அங்கு நீச் சலைப் பார்த்ததுமே பிடித்துப் போனது. அங்குள்ள பயிற்சி யாளர் விஜயகுமாரிடம் என் விருப்பத்தைத் தெரிவித்து, பயிற்சியில் இணைந்தேன். தொடக்கத்தில் சனி, ஞாயிறு களில் மட்டும் அங்கு சென்று பயிற்சி பெற்ற நான், பின்னர் தினமும் பயிற்சி மேற் கொள்ள ஆரம்பித்தேன்.

நீங்கள் வென்ற முதல் போட்டி?

நான் ஏழாம் வகுப்பு படிக் கும்போது திண்டுக்கல்லில் நடைபெற்ற மாநில அளவிலான நீச்சல் போட்டியில் தேனி மாவட்டத்தின் சார்பில் பங்கேற்றேன். அதில், 50 மீட்டர் பட்டர்பிளை பிரிவில் தங்கப் பதக்கம் தட்டிவந்தேன்.

நீங்கள் தேசியப் போட்டிக்குத் தேர்வானது எவ்வாறு?

இந்திய பள்ளி விளையாட்டுகள் சம்மேளனம் (எஸ்.ஜி.எப்.ஐ.) சார்பில் சென்னை வேளச்

சேரியில் கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற நீச்சல் போட்டியில் பங்கேற்றேன். அதில் 100 மீ. பட்டர்பிளை, 200 மீ.ஐ.எம். ஆகிய பிரிவுகளில் வெண்கலத்துடன், 200 மீ. பட்டர்பிளையில் தங்கம் வென்றேன். அதன் மூலம், டெல்லியில் நடந்த எஸ்.ஜி.எப்.ஐ. போட்டிக்குத் தேர் வானேன்.

நீங்கள் டெல்லிக்கு எந்த எதிர்பார்ப்புடன் சென்றீர்கள்?

டெல்லியில் நம்மால் முடிந்த அளவு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்றேன். அதன்படியே, நான் 200 மீ. பட்டர்பிளை பிரிவில் 6-ம் இடம் பிடித்தாலும், மாநில அளவில் 2.57 நிமிடங்களில் நீந்தியிருந்த நான், டெல்லியில் 2.50 நிமிடங்களில் நீந்தியது மகிழ்ச்சி அளித்தது. முதல்முறையாக தேசியப் போட்டியில் பங்கேற்றது, ஊக்கமூட்டும் அனுபவமாக அமைந்தது.



10 திண்டுக்கல் 27-6-2020

இளைஞர் மலர்

நீச்சலில் அசத்தும் அரசுப் பள்ளி மாணவி

வேறு தேசியப் போட்டியில் பங்கேற்றிருக்கிறீர்களா?

வேளச்சேரியில் கடந்த டிசம்பரில் நடந்த வாட்டர் போலோ அணி போட்டியில் எங்கள் தேனி அணி இரண்டாமிடம் பிடித்தது. அதன்மூலம், இந்த ஆண்டு ஜனவரியில் தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் நடைபெற்ற தென்மண்டல வாட்டர் போலோ போட்டியில் தமிழக அணி சார்பில் பங்கேற்று மூன்றாமிடம் பெற்றேன்.




உங்களின் உச்ச இலக்கு என்ன?

ஒலிம்பிக் போன்ற பெரிய போட்டியில் நாட்டுக்காக பதக்கம் வென்று கொடுப்பதுதான்.

போட்டிகளில் பங்கேற்பதற்கான செலவை எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

அம்மா தனது தினக்கூலியில் குடும்பத்தை நடத்துவதற்கே சிரமப்படும் நிலையில், எனக்கு சத்தான உணவுகள் வழங்குவதற்கும், போட்டிகளில் பங்கேற்பதற்கான செலவைச் சமாளிப்பதற்கும் மிகவும் சிரமப்படுகிறார். டெல்லியில் நடைபெற்ற போட்டிக்கே, எங்கள் பள்ளி ஆசிரியர்கள், முன்னாள் மாண வர்கள் மற்றும் எங்கள் உறவினரான கார்த்திக்கின் உதவியால்தான் செல்ல முடிந்தது. நான் இலவசப் பயிற்சி பெற்றாலும், தேவையான உபகரணங்கள் வாங்குவதற்கும், போட்டிகளில் பங்கேற்பதற்கும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. எனவே அரசின் உதவியை எதிர்பார்க் கிறேன்.

தகுதி வாய்ந்த வீராங்கனை சுவாதிக்கு அரசின் உதவிக்கரம் நீளும் என்று நம்புவோம்.



வாசகர் குரல்

மறைந்த தமிழறிஞர் கி.வ.ஜெகனாதன் அவர்களது அருள் எனும் கவசம் என்ற கட்டுரை அற்புதமானது. அவர் இன்னும் தன் எழுத்துக்களால் வாழ்கிறார் - என்றும் வாழ்வார் என்பதற்கு இக்கட்டுரையே ஒரு சான்று. இத்தகைய கட்டுரையைத் தேடி எடுத்து அருளுரை பகுதியில் வெளியிட்ட ஆசிரியரைவெகுவாகப் பாராட்டுகிறேன்.

- இல. வெங்கிடாசலம்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

★ ★ ★

உயிராக்கியவள் தாய், தன் உதிரத்தை உணவாக்கியவள் தாய், திரிசிராபுரத்தில் அவதரித்த ரங்கராஜனே, உன் பொய்க்கால் குதிரைகளும், மேத்தாவின் கண்ணீர் பூக்களும், வைரமுத்துவின் பழைய பனையோலைகளுமே என்னை ஏகலைவன் ஆக்கிய துரோணர்கள் ஆக்கியது உங்களை. மாயவனை பாடினாய், அவன் மருகனையும் பாடினாய். அத்தனையிலும் சிறப்பாய், நீ எழுதிய தாய், முத்தாய்ப்பாய் அமைந்தது. உன் கவித்துவத்தை உணர்ந்து, பதிவிட்டு பதிவுக்கு பட்டம் சூட்டிய ஆசிரியருக்கு உளமார்ந்த நன்றிகள்!

- செல்வகுமார், திருச்சி.

★ ★ ★

அய்யா குலமுரசு மின்னிதழாக வருவதும் உலகெங்கும் உள்ள மனமக்களைச் சென்றடைவதும் சந்தோஷமான செய்திதான். ஆனாலும், காகிதத் தாளில் அச்சுப் பிரதியைப் படிப்பதைப் போல என்னால் படிக்க முடியவில்லை. எனவே, சீக்கிரமே குலமுரசு வழக்கமான முறையில் அச்சுப் பிரதியாக வரவேண்டும் என்பது என் பிரார்த்தனை.

- எம். அங்கமுத்து, காரைக்குடி.

★ ★ ★

மாண்புமிகு அமைச்சர் இராதாகிருஷ்ணன் இல்லத் திருமண வாழ்த்தில் அமைச்சரின் குணநலன்களை வர்ணித்திருந்தது மிகவும் நன்றாக இருந்தது. அவரைச் சித்தரித்திருந்த விதம் அருமையாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது துணைவியாருக்கு தந்திருந்த முக்கியத்துவம் ரசிக்கத்தக்கதாக இருந்தது.

- K.R.கண்ணபிரான், வேளச்சேரி, சென்னை.

★ ★ ★

வழக்கமாக குலமுரசு பத்திரிகையின் அட்டையில் ஏதாவது ஒரு சுவாமி படத்தை வெளியிடுவீர்கள். கடந்த மாதக் குலமுரசில் சுவாமி விவேகானந்தர் படத்தை வெளியிட்டு அவரது வாழ்வியலையும் வெளியிட்டிருந்தீர்கள். மிகுந்த மகிழ்ச்சி. இணையதளத்தின் வழியே செய்யப்படும் வெளியீடு உலகளாவிய அளவில் செல்லும்போது விவேகானந்தர் படம் பார்ப்பவர்களை வெகுவாக ஈர்க்கும். நல்ல உத்தி. பாராட்டுதல்கள்.

- K. இராஜசேகரன், பெங்களூரு.

★ ★ ★

குலமுரசு இதழின் மே மாத வெளியீடு, இணையதளத்தின் வழியே ஆயிரக்கணக்கில் பார்த்து படித்துள்ளார்கள் என்ற தகவல் (By Screenshot) மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. உலகெங்கும் உள்ள நமது இன மக்கள் ஆர்வம் காட்டுகிறார்கள் எனில் அது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. வளர்க குலமுரசு.

R.N.S. சீனிவாசன், திருநெல்வேலி.

★ ★ ★

மகாப் பெரியவரின் திருஉருவப் படம் தந்த மகத்தான கருணை




கொங்குத் தலைநகர் கோவையில் வசிக்கும் ஒருவர் பெரியவாளின் தீவிர பக்தர். சட்டைப் பையிலும், தனது சூட்கேசிலும் மகாப் பெரியவா படத்தை வைத்து அவரை அனுதினமும் பூஜிக்கும் சிறந்த பக்தர்.

தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவதற்காக பெங்களூரில் இருக்கும் தன் குடும்பத்தினரைச் சந்திக்க பேருந்தில் பயணமானார்.

கையில் ஒரு சூட்கேஸ். அதில் அவரது கல்விக்கான பட்டம் பெற்ற சான்றிதழ்களுடன், பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட முக்கியமான பல சான்றிதழ்களும் இருந்தன.

தீபாவளிக்காக பெங்களூர் போகும் சமயம் அங்கேயே நல்ல வேலை கிடைத்தால் சேர்ந்து விடவேண்டும் என்கிற விருப்பத்துடன் தயாராகவே சான்றிதழ்களையும் சூட்கேசில் வைத்திருந்தார்.

நள்ளிரவில் அந்தப் பேருந்து ஈரோட்டில் நின்றபோது டீ குடிப்பதற்காக இறங்கினார். திரும்ப ஏறியபோது இவரது பெட்டியைக் காணவில்லை. துடித்துப் போனவர் பல இடங்களில் தேடிப் பார்த்து பெட்டி



முனைவர் துரை அங்குசாமி

கிடைக்காத நிலையில், போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுத்துவிட்டு வருத்தத்தோடு பெங்களூர் போய் சேர்ந்தார். இன்பமாய் கழிய வேண்டிய தீபாவளி துணிமணி முதல் சான்றிதழ்களையும் இழந்த நிலையில் பெரும் துன்பமான தீபாவளியாக ஆகிவிட்டது.

இவர் பெரியவரின் பக்தர். மனதுக்குள் பெரியவரிடம் பிரார்த்தனை செய்துகொண்டார்.

'பெட்டியில் உள்ள காக பணம் போனால் கூட பரவாயில்லை, சம்பாதித்து விடலாம். ஆனால், அவ்வளவும் சான்றிதழ்கள்...? இனி என்ன செய்வது? கெட்ட காலம் என்று இதைத் தான் சொல்வார்களா? நான் யாருக்கும் எந்தக் கெடுதலையும் நினைத்தவன் இல்லையே! எனக்கு ஏன் இப்படி நடந்தது?' என்று மகாப் பெரியவரை மனதில் நினைத்துப் பிரார்த்தனை செய்து கொண்டார்.

சில நாட்கள் சென்ற நிலையில், ஒருவர் போன் செய்து "உங்கள் சூட்கேஸ் ஒன்று என் வசம் உள்ளது. வந்து பெற்றுக்கொள்ளுங்கள்" என்றார். போன் செய்தவர் முகவரி தேடிச் சென்றார். அவரும் வரவேற்று பெட்டி ஒப்படைத்தார். ஒப்படைப்பதற்கு முன் நடந்ததையும் கூறினார்.

"இந்தப் பெட்டி அதோ தெரிகிற அந்தக் குப்பைத் தொட்டிக்கு அருகில் குப்பையோடு குப்பையாக கிடந்தது. நடுவில் விடாமல் இரண்டு நாட்கள் இரவு பகலாக மழையும் பெய்தது. நானும் போகும் போதும் வரும்போதும் பார்த்தேன். நேற்று யதார்த்தமாய் நல்ல பெட்டி இப்படிக் கிடக்கிறதே என்று உற்றுப் பார்க்கவும், அதனுள் ஒட்டப் பட்டிருக்கும் பெரியவர் படம் என் கவனத்தை ஈர்த்தது. பெரியவர் படம் என்னை பெட்டியை எடுத்துப் பார்க்கவும் தூண்டியது.

குப்பைத்தொட்டியில் கைவைக்கிறோம் என்கிற குறு குறுப்பை மீறிக்கொண்டு பெட்டியைத் தொட்டுத் தூக்கினேன். உள்ளே ஒரு பிளாஸ்டிக் போல்டரும் அதோடு பெரியவர் படமும் கூடவே சர்ட்டிபிகேட்களும் இருந்தன. அதில்தான் உங்கள் முகவரி, போன் நம்பர் எல்லாம் இருந்தது. எனக்கும் இது யாரோ திருடனின் வேலை... காசு பணத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பெட்டியை வீசி எறிந்துவிட்டு போய் விட்டான் என்பது புரிந்தது. உடனே உங்களுக்கும் போன் செய்தேன்" என்றார்.

அதைக் கேட்ட அன்பருக்கும் சிலிர்ப்பு!

"பெரியவர் கவசம் போல இருந்து என் சான்றிதழ்களைக் காப்பாற்றி உங்கள் மூலமாய திரும்பவும் கிடைக்க வைத்துவிட்டார். இதற்கு நான் எப்படி நன்றி சொல்வேன். உங்களுக்கும் நான் மனதார நன்றிகளைக் கூறிக்கொள்கிறேன்" என்றார்.

எல்லாம் மகாப் பெரியவாளின் மகிமை!

- கருணை மழை தொடரும்



கொரோனா நிவாரண உதவி

25-06-2020 அன்று நடைபெற்ற கொரோனா நிவாரண உதவி வழங்கும் நிகழ்வில் சென்னை, பார்டர் தோட்டம், R.L. முத்துவீரன் செட்டியார் தமது சொந்தப் பொறுப்பில் நூற்றுக்கணக்கான நம் சமுதாய மக்களுக்கு நிவாரண பொருட்களாக தலா 10 கிலோ அரிசியும், 1 கிலோ பருப்பும் வழங்கினார்.


செந்தில்குமார்
டெக்ஸ்டைல்ஸ் A/c.,
SINCE 1976
ஆடைகளின் அரண்மனை
எல்லாமே இருக்கு...
நல்லாவே இருக்கு...
வியக்கதக்க புத்தம் புதிய 2018-ன் பேஷன்
கலெக்ஷன்
ஆடைகளை அள்ளிச் செல்லுங்கள்....
S.K. டவர்ஸ், சித்த வீரப்பசெட்டி தெரு,
தருமபுரி. ✆ 04342 - 267581
மைசூர் : 0821 - 2437582 / தும்கூர் : 99801 88855





பூஜை பாத்திரங்கள் புதுசு போல் ஜொலிக்க

வாரா வாரம் பூஜை சாமான் தேய்க்கிறதே பெரிய வேலையா இருக்கும். பீதாம்பரி போட்டு தேய்த்தாலும் அந்த அளவிற்கு நமக்கு திருப்தியாக இருப்பதில்லை. அதற்காக அழுத்தி அழுத்தி தேய்க்க வேண்டியதாக இருக்கும். அப்படியே நாம் தேய்த்து வைத்தாலும் சீக்கிரமாகவே அதன் பல பளபளப்பு தன்மையை இழந்து விடும். ஆனால் இந்த முறையில் நீங்கள் பூஜை சாமான்களை தேய்த்தால் எந்த சிரமமும் இல்லாமல், எதையும் போட்டுக் கொதிக்க வைக்காமல் ஒரு மாதம் வரை புதுசு போலவே உங்கள் பூஜை அறையில் பூஜை சாமான்கள் மின்னிக் கொண்டிருப்பதை நீங்கள் கண்கூடாக பார்க்கலாம்.

சிலர் தண்ணீரில் புளியை போட்டு, அல்லது குக்கரில் புளியை போட்டு பூஜை சாமான்களையும் சேர்த்து கொதிக்க விடுவார்கள். அது போல் எல்லாம் எந்த தொல்லை பிடித்த வேலையும் இல்லாமல் மிக சுலபமாக உங்கள் பூஜை சாமான்களை நீங்கள் பளிச்சென்று ஜொலிக்க வைக்க முடியும். அதை எப்படி செய்வது என்பதை இந்த பதிவின் மூலம் தெரிந்து கொள்ளலாம் வாருங்கள்.

முதலில் உங்கள் பூஜை பாத்திரங்கள் எந்த அளவிற்கு இருக்கிறதோ அவை எல்லாம் மூழ்கும்படி ஒரு டப்பில் தண்ணீர் நிரப்பிக் கொள்ளுங்கள். அந்த தண்ணீரில் ஒரு ஸ்பூன் அளவுக்கு பேக்கிங் சோடா போட்டுக் கொள்ளுங்கள். உங்களிடம் நிறைய பூஜை சாமான்கள் இருந்தால் அதற்கேற்ப பேக்கிங் சோடாவின் அளவைக் கூட்டிக் கொள்ளுங்கள்.

அதன் பிறகு அதில் சின்தடிக் வினிகர் (Synthetic Vinegar) ஒரு மூடி சேர்த்துக் கொள்ளுங்கள். பொதுவாக 6, 7 பூஜை பாத்திரங்கள் வைத்திருப்பவர்களுக்கு இது பொருந்தும். அதற்கு மேல் நிறைய வைத்திருப்பவர்கள் அதற்கேற்ப எண்ணிக்கையையும் கூட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் புளி, எலுமிச்சை போன்றவற்றை பயன் படுத்துவதற்கு ஈடாக இருக்கும் இந்த சின்தடிக் வினிகர். இது உங்களுக்கு ஆன்லைன் அல்லது சூப்பர் மார்க்கெட்டுகளில் கிடைக்கும். விலையும் குறைவு தான். 20 ரூபாய்க்கு கிடைக்கிறது.

இரண்டும் தண்ணீரில் கலந்ததும் உங்கள் பூஜை சாமான்களை எண்ணெய் மட்டும் துடைத்து விட்டு அப்படியே போட்டு விடுங்கள். நீங்கள்

மஞ்சள் குங்குமத்தை கூட நீக்கத் தேவையில்லை. ஒரு அரை மணி நேரம் அப்படியே ஊற விடுங்கள். அதன் பிறகு ஒவ்வொன்றாக எடுத்து சபீனா அல்லது பீதாம்பரி பவுடர் கொண்டு சாதாரணமாக நீங்கள் தேய்த்தாலே போதும், புத்தம் புதிய பித்தளை பாத்திரம் போல் ஜொலிக்கும். இதற்காக நீங்கள் போட்டு அழுத்தம் கொடுக்க தேவையில்லை. லேசாக தேய்த்தாலே போதும்.

அதிக வேலைப்பாடுகள் கொண்ட பகுதிகளில் டூத் பிரஷ் கொண்டு தேய்க்கலாம். அதற்கென்று தனியாக டூத் பிரஷ் ஒன்றை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் கடையில் புதிதாக வாங்கியது போல் பளிச்சென்று இருக்கும். தண்ணீர் கொண்டு கழுவியதும் உடனே சுத்தமான துணி கொண்டு துடைத்து வைத்து விடுங்கள். தண்ணீரோடு அப்படியே வைத்து விடாதீர்கள். இதுபோல் நீங்கள் செய்தால் ஒரு மாதம் வரை பூஜை பாத்திரங்களை நீங்கள் விளக்க வேண்டிய அவசியமில்லை. அப்படியே புத்தம் புதுசா இருக்கும்.


பூஜை பாத்திரங்கள் கருமையாகாமல் இருக்க நீங்கள் விளக்கேற்றும் முனையில் மஞ்சள் குங்குமம் வைப்பதற்கு முன் விபூதி வைத்துக் கொள்ளுங்கள் அதன் மேல் மஞ்சள் குங்குமம் வைத்து திரி போடுங்கள். இப்படி தீபம் ஏற்றுவதால் கருப்பு



பிடிக்காது. சூடம் ஏற்றும் பொழுதும் இதேபோல் சிறிதளவு விபூதியை வைத்து ஏற்றுங்கள். விளக்கு எப்பொழுதும் தானாக அணைந்து விடக்கூடாது. விளக்கு அணைவதற்கு முன் நாமே பூ கொண்டு குளிர வைத்து விட வேண்டும். இப்படி செய்தால் சாஸ்திர ரீதியாகவும் நமக்கு நன்மை அளிக்கும். பூஜை சாமான்களை விளக்கவும் நமக்கு சுலபமாக இருக்கும்.



- நீருக்கு அடியில் இருக்கும் மணலை அளக்க ஹைட்ரோஃபோன் என்ற கருவி பயன்படுகிறது.
- இந்திய அரசின் மிக உயர்ந்த சிவிலியன் விருது 'பாரத ரத்னா' என்ற விருதாகும்.
- வெப்பம் உமிழாமல் வெளிச்சம் தரும் உயிரினம் 'மின்மினிப்பூச்சி' ஆகும்.
- புரதத்தை செரிமானம் செய்ய உதவும் பொருள் 'பெப்ஸின்' என்பதாகும்.
- இந்திய தேசிய மகாகவி என்றழைக்கப்படுபவர் 'ரவீந்திரநாத் தாகூர்'.
- இந்தியாவில் முதல் சென்சஸ் 1911-ம் ஆண்டு எடுக்கப்பட்டது.
- அதிகமான நாடுகளைக் கொண்ட கண்டம் ஆப்பிரிக்கா.
- அங்கோலா நாட்டு நாணயத்தின் பெயர் குவான்சா.
- பூமியின் விட்டம் 12 ஆயிரத்து 754 கிலோமீட்டர்கள்.
- அமெரிக்காவின் முதல் அதிபர் ஜார்ஜ் வாஷிங்டன் என்பவர் ஆவார்.
- மின்னியலின் தந்தை என்று வர்ணிக்கப்படுபவர் நிக்கோலா டெஸ்லா.


AKAS
Caring 7 billion
AKAS DripSure
Infusions Controller
For every bed
AKAS TERUMAX Rx
Advanced Syringe pump
with drug library - stackable
22
Since 1996
Nation wide
Service Network
For Service:
Call 098840-79116
support@akasmedical.com
AKAS INFUMAX
Advanced Infusion pump
TRAZE 12A
Carbon copy
12.1" PATIENT MONITOR
TRIOMAX
Carbon copy
ECG + SPO2 + NIBP Monitor
QVS-100
QUICK VITAL SIGN
Measures 7 Parameters
in 2 Minutes
• Height
• Weight
• BMI
• Oxygen Saturation
• Pulse Rate
• Temperature
• Blood Pressure
TRAZE DUO II
NIBP + SPO2 Monitor
M20
Advanced LED Vision Chart
Manufacturer of Medical Equipment Since 1996
AKAS Medical
240/1, Periya Colony,
Athipet, Ambattur,
Chennai 600 058.
Tamilnadu, India.
sales@akasmedical.com
Mob: +91 98403 79116
Available Across 29 States and 7 UT's
www.akasmedical.com
Critical Care Division
Infusion, Syringe Pumps
Patient Monitors, Oxygen Concentrator,
1/2/3 Para Monitors
Ophthalmology Division
LCD Vision Chart, A-Scan, B-Scan
Clinical Division
Quick Vital Sign, Infusion Controller

ஆடி மாதத்தில் அம்மனின் அருளாட்சி



ஆடிக் காற்றோடு அம்மனின் அருட்காற்று அரவணைக்கும் மாதமாக ஆடி மாதம் திகழ்கிறது. பருவ மாற்றத்தால் ஏற்படும் நோய்க்கிருமிகளை கட்டுப்படுத்தும் ஆற்றல் வேப்பிலை மற்றும் எலுமிச்சைக்கு உள்ளது. எனவே ஆடி மாதம் முழுக்கவே வேப்பிலைக்கும் எலுமிச்சைக்கும் உகந்தவளாக அம்மனுக்கு திருவிழாக்கள் நடைபெறுகின்றன. ஆடி மாதத்தைக் கணக்கிட்டுத்தான் பண்டிகைகளின் தொடக்கம் அமைகிறது.

ஆடி மாதத்தில் சிவனின் சக்தியை விட பார்வதியின் சக்தி அதிகமாக இருக்கும் என்பது ஐதீகம். இந்த மாதத்தில் விழாக்கள் வரிசை கட்டி நிற்கும். ஆடி முதல் நாள் தொடங்கி கடைசி நாள் வரையும் கொண்டாட்டங்களுக்குக் குறைவிருக்காது.

ஆடி வெள்ளி

ஆடி வெள்ளிக் கிழமையன்று சுமங்கலிப் பெண்கள் கணவனின் ஆயுள் அதிகரிக்கவும், திருமணமாகாத பெண்கள் விரைவில் திருமணம் கைகூடி வரவும் விரதம் மேற்கொள்வார்கள்.

இந்த நாளில், திருமணமாகாத பெண்கள் குத்துவிளக்கினை அலங்கரித்து, தீபத்தில் அம்மனை ஆவாஹனம் செய்து, லலிதா சகஸ்ர நாம அர்ச்சனை செய்து மனதாரப் பிரார்த்தனை செய்தால், நல்ல கணவனை அடையலாம். ஆடி வெள்ளிக்கிழமைகளில், கன்யா பூஜை, ராகுகால பூஜை, நாகதோஷ பூஜை செய்வதால், குடும்பம் சந்தோஷமாக அமையும். இல்லத்தில் என்றும் மகிழ்ச்சி தங்கும்! ஆடி மாதம் பிறந்ததும் தட்சணாயனம் ஆரம்பமாகிறது. இது மார்கழி மாதம் வரை நீடிக்கும். இந்த புண்ணிய கால கட்டங்களில் புனித நதிகளில் நீராடுவது மிகவும் விசேஷமானது.

ஆடி மாதம் முழுவதும் கிராமப்புறத்தில் காவல் தெய்வமாக விளங்கும் மாரியம்மன், அய்யனாரப்பன், மதுரைவீரன், மாடசாமி, கருப்பண்ணசாமி போன்ற கிராம தேவதைகளுக்கு பூஜைகளும், விழாக்களும் நடைபெறும்.

ஆடி செவ்வாய்

ஆடி செவ்வாய் தேடிக்குளி' என்பார்கள். ஆடி மாதம் வரும் செவ்வாய்க்கிழமை தோறும் சுமங்கலிப் பெண்கள் மஞ்சள் பூசிக் குளிப்பதால், மாங்கல்ய பலம் கூடும் என்பதே இந்த பழமொழி கூறும் தத்துவம்.

அதேபோன்று ஆடி மாதச் செவ்வாய்க் கிழமைகளில் பெண்கள் பலரும், 'அவ்வையார் விரதம்' கடைப்பிடிப்பார்கள். கணவனின் ஆயுள் நீடிக்கவும், குழந்தை வரம் வேண்டியும், குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கவும், கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமண வரம் கிடைக்கவும் இந்த விரத வழிபாட்டின் மூலம் பிரார்த்தித்துக் கொள்வார்கள்.

ஆடி செவ்வாய்க்கிழமைகளில் கோவிலில் எலுமிச்சம் பழ விளக்கு ஏற்றினால் கூடுதல் பலன்கள் கிடைக்கும். ஆனால் எலுமிச்சம் பழ விளக்குகளை ஒரு போதும் வீட்டில் ஏற்றக் கூடாது.

ஆடி தபசு

ஒரு முறை அம்பாள், சிவபெருமானிடம் ஒரு வரம் கேட்டாள். அதாவது விஷ்ணுவுடன் இணைந்து காட்சி தர வேண்டும் என்பது அவளது கோரிக்கை. உடனே சிவபெருமான், "பொதிகை மலையில் புன்னை வனத்தில் தவம் புரிந்தால் அந்தக் காட்சி காணக்கிடைக்கும்" என்றார். அம்பாளும் ஒற்றைக்காலில் ஊசிமுனையில் நின்று தவம் செய்தாள். இதையடுத்து ஆடி பவுர்ணமி நாளில், பார்வதியின் வேண்டுகோளை நிறைவேற்றி 'சங்கர நாராயணர்' கோலத்தில் இறைவன் காட்சி அளித்தார். அம்பிகை கோமதி அம்மனாக வடிவம் கொண்டு, அந்தக் காட்சியைக் கண்டு தரிசனம் செய்தார். இந்த விழா இன்றும் பாரம்பரியமாக நெல்லை மாவட்டம் சங்கரன்கோவிலில் 12 நாட்கள் அம்மனின் ஆடி தபசு திருநாள் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. 'அரியும் சிவனும் ஒன்றே' என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்த இந்த விழா நடத்தப்படுகிறது.



அருள்மிகு வடிவுடை அம்மன் திருவொற்றியூர்

ஆடிப்பூரம்

அம்பாளுக்குரிய விசேஷ தினங்களில் ஒன்று ஆடிப்பூரம். ஆடி மாதத்தில் வரும் பூரம் நட்சத்திரத்தில் இந்த விழா கொண்டாடப்படுகிறது. இந்த நல்ல நாளில்தான் உமாதேவி அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன. உலக மக்களை காப்பதற்காக அம்பாள், சக்தியாக உருவெடுத்த தினம் ஆடிப்பூரம். இந்த சைவ ஆலயங்களில் மட்டுமல்லாது, வைணவ தலங்களிலும் வெகுசிறப்பாக நடைபெறும். ஏனெனில் ஆண்டாள் அவதரித்த தினம் ஆடி மாதத்தில் வரும் பூரம் நட்சத்திரம் ஆகும்.

ஆடி அமாவாசை

ஆடி அமாவாசையை பித்ருக்கள் தினமாகக் கொண்டாட வேண்டும். அன்றைய தினம் மறைந்த நம் முன்னோர்களுக்கு தர்ப்பணம்



நிறைவேற்றினால், ஆறு மாதம் தர்ப்பணம் செய்த பலன் கிடைக்கும். சூரிய பகவான் ஆண்மை, ஆற்றல், வீரம் போன்றவற்றை தரும் ஆற்றல் படைத்தவர். மனதுக்கு அதிபதியான சந்திரன், மகிழ்ச்சி, தெளிந்த அறிவு, இன்பம், உற்சாகம் போன்றவற்றை தரவல்லவர். இத்தகைய பெருமைகளை எல்லாம் தருகின்ற சூரிய, சந்திரர்களை, தாய்- தந்தையை இழந்தவர்கள் அமாவாசை தினங்களில் வழிபாடு செய்வது சிறப்பான ஒன்றாகும். தட்சிணாயன காலத்தில் வரும் முதல் அமாவாசை என்பதால், ஆடி அமாவாசை சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஆடி கிருத்திகை

கார்த்திகை நட்சத்திரம், முருகப்பெருமானுக்கு உகந்த நட்சத்திரம். மாதம்தோறும் வரும் கிருத்திகை நட்சத்திரம் சிறப்பானது. ஆடி மாதத்தில் வரும் கிருத்திகை நட்சத்திரம் கூடுதல் சிறப்பு கொண்டது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் தங்கள் பிரார்த்தனைகளையும், நேர்த்திக்கடன்களையும் செலுத்த முக்கிய நாளாக இந்த நாளை தேர்வு செய்கிறார்கள். ஆடி மாதத்தில் இருந்து தொடங்கி ஆறு மாதங்கள் கார்த்திகை விரதம் இருந்து தை மாதக் கார்த்திகையில் விரதத்தை முடித்தால், சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

ஆடி பெருக்கு

ஆறு, மக்களின் ஜீவ நாடி. ஆடி மாதத்தில் தான் தென்மேற்குப் பருவ மழை வலுவடைந்து, காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் புது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிவரும். அப்படி ஆடியில் காவிரி பெருக்கெடுத்து வருவதைத்தான் மக்கள் 'ஆடிப்பெருக்கு' என்று கொண்டாடுகிறார்கள். இந்த விழாவானது ஆடி மாதம் 18-ந் தேதி கொண்டாடப்படும். காவிரி கரையோரங்களில் இந்த விழா களைகட்டும். காவிரி அன்னைக்கு சீர் செய்து வணங்குவது வழக்கமாக உள்ளது. தாமிரபரணி கரையிலும் ஆடிப்பெருக்கு உற்சாகமாகக் கொண்டாடப்படுகிறது. ஆடிப் பெருக்கு விழா பல நூற்றாண்டுகளாக தமிழர் மரபாக பின்பற்றப்படுகிறது.

கேரளாவில் ஆடி மாதத்தை கஷ்டமான மாதமாக அம்மாநில மக்கள் கருதுகிறார்கள்.



ஆடி பௌர்ணமி

ஆடி பௌர்ணமி தினத்தன்றுதான் ஹயக்ரீவர் அவதாரம் நிகழ்ந்தது. எனவே ஆடி பவுர்ணமி தினத்தன்று வைணவ தலங்களில் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

ஆடி மாதம் சுக்ல தசமியில் திக் தேவதா விரதம் இருக்க வேண்டும். அன்று திக் தேவதைகளை அந்தந்த திக்குகளில் வணங்கி பூஜித்தால் நினைத்தது நடக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

ஆடி மாதம் சுக்லபட்ச ஏகாதசி முதல் கார்த்திகை மாத சுக்லபட்ச ஏகாதசி வரை மாச உபவாசம் இருப்பது குடும்பத்தில் அமைதி ஏற்படுத்தும்.

ஆடி வளர்பிறை துவாதசி நாளில் தொடங்கி கார்த்திகை மாதம் வளர்பிறை துவாதசி நாள் வரை பெண்கள் துளசி பூஜை செய்து வந்தால், நினைத்தது நடைபெறும். வீட்டில் சகல செல்வங்களும் குவியும்.


P.M.P. கலை & அறிவியல் கல்லூரி
(இருபாலர் பயிலகம் - பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது)
தோக்கம்பட்டி, தருமபுரி–5.
Ph : 04342 - 292681, 231682 Cell : 94432 59019
அன்பு அறிவு அறம்
குறைந்த கட்டணம்
U.G COURSES
B.Sc., Computer Science / Mathematics, Maths., (C.A) / Physics / Chemistry,
B.C.A., B.Com.,(C.A), B.B.A.,
B.Com., B.A., Tamil / English
நிறைந்த கல்வி
P.G COURSES
M.Sc., Mathematics, Physics / Chemistry, M.Com.,
இலவச பேருந்து வசதி
கல்லூரியின் சிறப்பம்சங்கள் :
ஆண்டுதோறும் 80% மாணவர்கள் தேர்ச்சி பெற்று பட்டம் பெறுகின்றனர்.
SPOKEN ENGLISH, Personality Development மற்றும் Communication Skills



மணக்கோலம் வாசகர்கள் கவனத்திற்கு

- ★ மணக்கோலம் பகுதி வெளிப்படையானது. நம் இனமக்கள் வரன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள உதவும் இலவச சேவைப் பகுதி. இது விளம்பரம் அல்ல. இதற்கு தனியாகக் கட்டணம் கிடையாது.
- ★ மணக்கோலம் பகுதியில் வரன் விபரம் வெளியிட 24 மனை குலமுரசு இதழுக்கு ஆண்டு சந்தாதாரராக இருக்கவேண்டும் என்பது மட்டுமே விதிமுறை.
- ★ இப்பகுதியில் வரன் பற்றிய தகவல்கள் மூன்று மாத இதழ்களில் தொடர்ந்து வெளியிடப்படும். மூன்று மாதங்களில் வரன் அமையாதவர்கள் மீண்டும் மூன்று மாதங்கள் மறுபிரசுரம் செய்து கொள்ளலாம். இம்முறையில் ஆண்டு சந்தா நிறைவடையும் காலம் வரை ஒருவர் நான்கு முறை மறுபிரசுரம் செய்து கொள்ளலாம்.
- ★ மணக்கோலம் பகுதியில் மறுபிரசும் செய்ய, விபரம் சேர்க்க, சந்தா விபரம் அறிய 9965900990 என்ற செல்பேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும் அல்லது manakolam24@gmail.com என்ற மின்னஞ்சலில் தெரிவிக்கவும்.
- ★ வரன்களுக்குத் திருமணம் உறுதிசெய்யப்பட்டால் சேவை மைய எண்ணில் தொடர்பு கொண்டு வரன் தகவலை நீக்கிக் கொள்ளலாம்.
- ★ மணக்கோலம் மூலமாக வரன் அமைந்தவர்கள் திருமணப் படத்தை குலமுரசில் வெளியிட விபரங்களுடன் அனுப்பிவைத்தால், வெளியிடப்படும்
- ★ ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்கு முன்பு வரும் வரன் தகவல்கள் மட்டுமே அம்மாத இதழில் இடம்பெறும். அதற்குப்பின் வருபவை அதற்கடுத்த இதழில் இடம்பெறும்.
- ★ இப்பகுதியில் வெளியாகும் வரன் விபரங்களுக்கு வெளியிடும் குடும்பத்தாரே முழுப்பொறுப்பு. மணமகன் அல்லது மணமகள் குறித்த விபரங்களை சம்பந்தப்பட்ட குடும்பத்தாரே தொடர்பு கொண்டு விசாரித்து தங்களுடைய சொந்தப் பொறுப்பில் திருமணங்களை உறுதி செய்துகொள்ளவும்.
- ★ வணிக நோக்கமுடையவர்கள் - இடைத்தரகர்கள் எந்த நிலையிலும் மணக்கோலம் பகுதியைப் பயன்படுத்தி பணம் வசூலிப்பதோ - நகல் எடுத்து விற்பனை செய்வதோ - வேறு வழிகளில் பயன்படுத்துவதோ கூடாது.
